மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவையெல்லாம் நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கிடு) உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி பேரவைக்கு அளிப்பார். (குறுக்கீடு) திரு. பாண்டுரங்கன், தொண்டை பெரிதாக இருக்கிறது என்று கத்தாதீர்கள், உட்காருங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினெட்டாவது முதல் இருநூற்று இருபத்து இரண்டாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.